## கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 29.11.2023 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் அக்டோபர் 2023-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.681**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2023-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.682**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் அக்டோபர் 2023-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.683**

4. இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் (பொ) அவர்களின் அக்டோபர் 2023-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.684**

5. இந்நகராட்சி வருவாய் ஆய்வாளர்களின் அக்டோபர் 2023-ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)
**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.685**

.

6. ஈரோடு மாவட்டத்தில் உள்ள AC Sheet கூரை உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்களையும் குழந்தைகளின் நலன் கருதி PUF Sheet கூரையாக மாற்றியமைக்க ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் 19.10.2023 இல் நடைபெற்ற மாவட்ட அளவிலான அனைத்து துறை அலுவலருக்கான ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார். அதன் படி உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அங்கன் வாடி மைய கட்டிடங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி நிர்வாகம் மூலம் மாற்றியமைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்கள் .அதன் படி இந்நகராட்சியில் உள்ள 16 அங்கன் வாடி மையங்கள் நேராய்வு செய்யப்பட்டதில் 4 மையங்கள் சிமெண்ட் கான்கீரிட் கூரை உள்ளது. வாடகை கட்டிடத்தில் ஒரு மையமும் CSI Church வளாகத்தில் ஒரு மையமும் செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள ள 9 மையங்கள் AC Sheet கூரையை மாற்றி PUF Sheet கூரையாக மாற்றவும் மற்றும் இதர மராமத்து பணிகள் செய்யவும் கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது .

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை.ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | LIG காலனி மற்றும் காளியண்ணன் நகர் அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் | 5.50 |
| 2 | நாய்க்கன் காடு அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் | 5.00 |
| 3 | பெரியண்ணன் வீதி மற்றும் மொடச்சூர் அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் (2 எண்ணிக்கை) | 6.80 |
| 4 | சீத்தம்மாள் காலனி மற்றும் வேங்கம்மையார் பள்ளியில் உள்ள அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் (2 | 3.50 |

| | | |
|---|---|---|
| | எண்ணிக்கை) | |
| 5 | செங்கோடப்பா மனைப்பிரிவில் உள்ள அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் | 4.30 |
| 6 | சிலேட்டர் ஹவுஸ் வீதியில் உள்ள அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் | 3.80 |
| 7 | வெங்கடாச்சலம் பேட்டையில் உள்ள அங்கான்வாடிமையம் பராமரிப்பு பணி செய்தல் | 3.20 |
| | **மொத்தம்** | **32.10** |

மேற்கண்ட பணிகளை செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2538/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிகளை டிசம்பர் 2023 இறுதிக்குள் முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதால் நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் .

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.686**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் பள்ளி மேம்பாட்டு மானியம் –மூலதன (Capital Work) பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25741/2023/SS2, நாள்.26.10.2023 இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி முதல் தளத்தில் கூடுதலாக 2 எண்ணிக்கை புதிய வகுப்பறைகள் கட்டுதல் | 28.00 |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முதல் தளத்தில் 4 எண்ணிக்கையில் புதிதாக வகுப்பறைகள் கட்டுதல் | 50.00 |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளியில் 2+2 எண்ணிக்கையில் முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 48.00 |
| 4 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட மொடச்சூர் உயர்நிலைப்பள்ளியில் 3 எண்ணிக்கையில் முதல் தளத்தில் புதிதாக வகுப்பறைகள் கட்டுதல் | 28.00 |
| | **மொத்தம்** | **154.00** |

(ந.க.எண்.2533/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மான எண்.687**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதிகளில் பள்ளி மேம்பாட்டு மானியம் –பராமரிப்பு (O&M Work) பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை

உத்திரவு ந.க.எண்.6003/2023/SS2, நாள்.25.10.2023 இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பராமரப்பு பணிகள் செய்தல் | 3.30 |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.70 |
| 3 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி தொடக்கப்பள்ளி நாய்க்கன் காடு பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 2.00 |
| 4 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட மொடச்சூர் உயர்நிலைப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 7.00 |
| 5 | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட மொடச்சூர் தொடக்கப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் | 10.00 |
| | **மொத்தம்** | **25.00** |

(ந.க.எண்.2532/2023/இ1)
**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மான எண்.688**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தற்பொழுது கூடுதல் கட்டிடம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இந்நிலையில் இங்குள்ள பழைய கட்டிடம் மிக மோசமான நிலையில் உள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்த நகரமைப்பு ஆய்வாளர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.மேலும் பழைய உபயோகப்படுத்த முடியாத சேதமடைந்த கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பள்ளியில் சேதமடைந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.2533/2023/இ1)
**அலவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம் .
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.689**

10. இந்நகராட்சியில் தூய்மை பாரத திட்டம் (SBM 2.0) 2023–2024 திட்டத்தின் கீழ் கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு கழிவு நீர் ஊர்தி (Cesspool Tanker) கொள்முதல் செய்தல் பணியினை ரூ.43,25,000 மதிப்பீட்டில் செய்வதற்கு 06.10.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளார்கள் .

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொழில்நுட்ப தகுதி விவரம் |
|---|---|---|
| 1. | M/s. ABT Industries Limited பாலக்காடு மெயின் ரோடு கோயமுத்தூர் | தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளார் |
| 2. | M/s .ASR Body Works கோயமுத்தூர் | தொழில்நுட்ப தகுதி இல்லை |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்ததாரர் மட்டுமே தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்ததால் உரிய அறிவிப்பு அனுப்பப்பட்டு 04.11.2023 இல் விலை விவரங்கள் அடங்கிய உறை திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலை விகிதம் அளித்துள்ளார்.

.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்** |
|---|---|---|
| 1. | M/s. ABT Industries Limited<br>பாலக்காடு மெயின் ரோடு<br>கோயமுத்தூர் | 0.01 மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக வழங்கியுள்ள M/s. ABT Industries Limited அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். ந.க.எண். 2109/2023/E1)**

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ.). .மன்றம் அனுமதிக்கலாம்

ஆ). மேற்படி பணிகளில் வ.எண்.1 –க்கு மதிப்பீட்டு விலை விகிதத்திலே அளித்துள்ள M/s. **ABT Industries Limited** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

இ). பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு அ அனுமதிக்கப்பட்டது. ஆ மற்றும் இ ஏற்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.690**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தை வணிக வளாக IUDM கடைகளுக்கு 03.11.2023 ஆம் தேதியன்று மூன்றாவது முறையாக முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடை பெற்ற கடைகள் :

1. தினசரி சந்தை IUDM கடை எண். A.02 முதல் கடை எண். A.06 வரை (5 கடைகள்)
2. தினசரி சந்தை IUDM கடை எண். A.08
3. தினசரி சந்தை IUDM கடை எண். A.11 மற்றும் A.12 வரை (2 கடைகள்)
4. தினசரி சந்தை IUDM கடை எண். A.17
5. தினசரி சந்தை IUDM கடை எண். A.19 முதல் கடை எண். A.21 வரை (3 கடைகள்)
6. தினசரி சந்தை IUDM கடை எண். A.24 மற்றும் A.25 வரை (2 கடைகள்)
7. தினசரி சந்தை IUDM கடை எண். G.1 மற்றும் கடை எண்.G.2 ( 2 கடைகள்

மேற்படி 16 கடைகளில், ஐந்து கடைகளுக்கு மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டனர். விபரம் பின்வருமாறு.

| வ.எண் | கடையின் விபரம் | ஏலத்தில் கலந்து கொண்டவர் விபரம் | ஏலத்தொகை |
|---|---|---|---|
| 1 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.02** | திரு.ஏ.திருவேங்கடம்<br>த/பெ. அம்மாசையப்பன்,<br>174ஏ, பச்சைமலை ரோடு, கோபி<br>94421 00034 | ரூ.15,100/– |
| | | திருமதி.வே.மகேஸ்வரி<br>க/பெ. வேங்கையன்,<br>265, ராஜன் நகர்,<br>மொடச்சூர், கோபி<br>97915 77601 | **ரூ.15,200/–** |

| | | | |
|---|---|---|---|
| 2 | தினசரி சந்தை IUDM<br>கடை எண். **A.04** | திரு.ஏ.செங்கோட்டையன்<br>த/பெ. ஆறுமுகம்,<br>51, மல்லிகை நகர்,<br>கோட்டீஸ்வரா நகர் எக்ஸ்டன்சன்,<br>கோபிசெட்டிபாளையம்,<br>88702 97557 | ரூ.15,100/- |
| | | திரு.எஸ்.ஜெகதீஸ்வரன்<br>த/பெ.ஏ.செங்கோட்டையன்,<br>51, மல்லிகை நகர்,<br>கோட்டீஸ்வரா நகர் எக்ஸ்டன்சன்,<br>கோபிசெட்டிபாளையம்,<br>95979 94408 | **ரூ.15,200/-** |
| 3 | தினசரி சந்தை IUDM<br>கடை எண். **A.12** | திரு.என்.ரமேஷ்குமார்<br>த/பெ. நாகலிங்கம்,<br>141, ஆசிரியர் நகர்,<br>குள்ளம்பாளையம் கோபி,<br>98427 80667 | **ரூ.15,200/-** |
| | | திருமதி.ஆர்.விஜயலட்சுமி<br>க/பெ. ரமேஷ்குமார்<br>99பி, யாகூப் வீதி, கோபி<br>93635 00466 | ரூ.15,100/- |
| 4 | தினசரி சந்தை IUDM<br>கடை எண். **A.24** | திருமதி.எஸ்.ஜெயந்தி,<br>க/பெ. சரவணக்குமார்,<br>18, வாய்க்கால் வீதி, கோபி<br>95668 40981 | ரூ.15,100/- |
| | | திரு.ஜி.என், சரவணக்குமார்<br>த/பெ. நடராஜ்<br>18, வாய்க்கால் வீதி, கோபி<br>94439 26367 | **ரூ.15,300/-** |
| | | திரு.வி.கவியரசன்<br>த/பெ. வெங்கிடுசாமி,<br>26/92, புகழேந்தி வீதி, கோபி<br>99440 14715 | ரூ.15,200/- |
| 5 | தினசரி சந்தை IUDM<br>கடை எண். **A.25** | திருமதி.எஸ்.ஜெயந்தி,<br>க/பெ. சரவணக்குமார்,<br>18, வாய்க்கால் வீதி, கோபி<br>95668 40981 | ரூ.15,500/- |
| | | திரு.ஜி.என், சரவணக்குமார்<br>த/பெ. நடராஜ்<br>18, வாய்க்கால் வீதி, கோபி<br>94439 26367 | **ரூ.15,600/-** |
| | | திரு.வி.கவியரசன்<br>த/பெ. வெங்கிடுசாமி,<br>26/92, புகழேந்தி வீதி, கோபி<br>99440 14715 | ரூ.15,300/- |
| | | திரு.நிஷாகரன்<br>த/பெ. நடராஜமூர்த்தி,<br>5, திம்மையன் புதூர்,<br>அரியப்பம்பாளையம், ரங்கசமுத்திரம்,<br>சத்தியமங்கலம் 638402<br>78291 51750 | ரூ.15,400/- |

மேற்படி தினசரி சந்தை IUDM கடை எண். **A.25** க்கு திரு.நிஷாகரன் என்பவர் ரூ.16,174/–க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார், மேற்படி நிஷாகரன் என்பவர் ஏல அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையின்படி, 02.11.2023 ம் தேதி மாலை 4.00 மணிக்குள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பம் சமர்பிக்கவில்லை.

மேற்கண்ட விபரங்களின் படி,

வரிசை எண். 1 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.02 க்கு திரு.ஏ.திருவேங்கடம் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/–ஐ விட கூடுதலாக ரூ.100/– சேர்த்து, திருமதி.வே.மகேஸ்வரி என்பவர் ரூ.15,200/–க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 2 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.04 க்கு திரு.ஏ.செங்கோட்டையன் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/–ஐ விட கூடுதலாக ரூ.100/– சேர்த்து, திரு.எஸ்.ஜெகதீஸ்வரன் என்பவர் ரூ.15,200/–க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 3 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.12 க்கு திருமதி.ஆர்.விஜயலட்சுமி என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/–ஐ விட கூடுதலாக ரூ.100/– சேர்த்து, திரு.ரமேஷ்குமார் என்பவர் ரூ.15,200/–க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 4 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.24 க்கு திருமதி.எஸ்.ஜெயந்தி என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,100/– மற்றும் திரு.வி.கவியரசன் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,200/– ஐ விட கூடுதலாக திரு.ஜி.என்.சரவணக்குமார் என்பவர் ரூ.15,300/–க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வரிசை எண். 5 ல் கண்டுள்ள தினசரி சந்தை IUDM கடை எண். A.25 க்கு திருமதி.எஸ்.ஜெயந்தி என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,500/–, திரு.வி.கவியரசன் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,300/– மற்றும் திரு.நிஷாகரன் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகை ரூ.15,400/– ஆகியவற்றை விட கூடுதலாக திரு.ஜி.என்.சரவணக்குமார் என்பவர் ரூ.15,600/–க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 06.11.2023 ஆம் தேதிய குறிப்பில், தினசரி சந்தை IUDM கடை எண்கள். A.02, A.04, A.12, A.24 மற்றும் A.25 ஆகிய ஐந்து கடைகளுக்கு உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரியுள்ள நபர்களுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று, கட்டுமான பணிகள் முடிவடைந்தபின் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம் எனவும், தினசரி சந்தை IUDM கடை எண். A.25 க்கு ஏல அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையின்படி 02.11.2023 ம் தேதிக்குள் ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கான விண்ணப்பம் சமர்பிக்காத காரணத்தினால், திரு.நிஷாகரன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்கள் குறிப்பின்படி,

தினசரி சந்தை IUDM கடை எண். A.25 க்கு ஏல அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையின்படி 02.11.2023 ம் தேதிக்குள் ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கான விண்ணப்பம் சமர்பிக்காத காரணத்தினால், திரு.நிஷாகரன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்கவும்,

1. தினசரி சந்தை IUDM கடை எண். A.02 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள திருமதி.வே.மகேஸ்வரி என்பவருக்கும்,
2. தினசரி சந்தை IUDM கடை எண். A.04 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/– கோரியுள்ள திரு.எஸ்.ஜெகதீஸ்வரன் என்பவருக்கும்,

3. தினசரி சந்தை IUDM கடை எண். A.12 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,200/- கோரியுள்ள திரு.என்.ரமேஷ்குமார் என்பவருக்கும்,
4. தினசரி சந்தை IUDM கடை எண். A.24 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,300/- கோரியுள்ள திரு.ஜி.என்.சரவணக்குமார் என்பவருக்கும்.
5. தினசரி சந்தை IUDM கடை எண். A.25 க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.15,600/- கோரியுள்ள திரு.ஜி.என்.சரவணக்குமார் என்பவருக்கும்.

புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி வணிக வளாக கட்டுமான பணிகள் முடிவடைந்தபின், ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கவும், ஏலம் போகாத மீதமுள்ள 11 கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1272/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.691**

12. நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள கீழ்க்கண்ட 22 கடைகளுக்கு 03.05.2023 ம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 25, 39, 35, 36, 38, 50, 52, 65, 21, 44
2. பழையாஸ்பத்திரி வீதி கறிக்கடைக்கு கிழபுறம் மேற்கு பார்த்த கடைகளுக்கு பின்புறம் கிழக்கு பார்த்த கடை எண். 13 மற்றும் 19
3. புதிய பேருந்து நிலைய காலியிடத்தில் உள்ள இளநீர் கடை.
4. பழைய பேருந்து நிலைய கடை எண். 4
5. பழையாஸ்பத்திரி வீதி கறிக்கடைகளுக்கு கிழபுறம் கிழக்கு பார்த்த கடை எண். 4 மற்றும் 5
6. ராமநாதன் வீதி கடை எண். 2
7. IUDP மோர் மார்கட் கடை எண். 10 மற்றும் 11
8. வாரசந்தை கடை எண். 30
9. பழையாஸ்பத்திரி வீதி கடைகளுக்கு வடபுறம் உள்ள மேற்கு பார்த்த ஆட்டிறைச்சி கடை எண். 06
10. பழையாஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண். 26

மேற்கண்ட கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. கீழ்க்கண்ட விவரப்படி ஒரே ஒரு கடைக்கு மட்டும் இரண்டு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர்.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஏற்கெனவே உள்ள மாத வாடகை ரூ.. | ஏலத்தொகை ரூ. |
|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] |
| 1 | பழையாஸ்பத்திரி வீதி கடைகளுக்கு வடபுறம் உள்ள மேற்கு பார்த்த ஆட்டிறைச்சி கடை எண். 06 | திரு.கே.வேலுச்சாமி த/பெ. குப்புசாமி, 7/3, குப்பாண்டார் வீதி-4 கோபிசெட்டிபாளையம். 94424 35682 | ரூ.4,497/- | **ரூ.4,700/-** |
| | | திரு.ஏ.செங்கோட்டையன் த/பெ. ஆறுமுகம், 51, மல்லிகை நகர், கோட்டீஸ்வரா நகர் | ரூ.4,497/- | ரூ.4,600/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எக்ஸ்டன்சன்,<br>கோபிசெட்டிபாளையம்<br>88702 97557 | | |

மேற்கண்ட விபரப்படி வரிசை எண். 1ல் கண்டுள்ள கடைக்கு திரு.ஏ.செங்கோட்டையன் என்பவர் கோரியுள்ள ஏலத்தொகையினை விட கூடுதலாகவும், ஏற்கெனவே உள்ள மாதவாடகை ரூ.4,997/– ஐ விட கூடுதலாக ரூ.203/– சேர்த்து, திரு.கே.வேலுச்சாமி என்பவர் ரூ.4,700/– க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை கோரியுள்ளார்.

எனவே பழையாஸ்பத்திரி வீதி கடைகளுக்கு வடபுறம் உள்ள மேற்கு பார்த்த ஆட்டிறைச்சி கடை எண். 06 –க்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.4,700/– ஐ ஏற்றுக்கொண்டு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு திரு.கே.வேலுச்சாமி த/பெ. குப்புசாமி என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1567/2018/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.692**

13. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணியினை செய்வதற்கு 17.11.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் குடிநீர் பணியை மேற்கொள்ள குடிநீர் விநியோக பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் ஆட்கள் எடுத்து பணி செய்தல் (2 மாதங்களுக்கு) | 7,00,000 | **M/s. LD Man Power Solution ஒப்பந்ததாரர்**<br>**வேலூர்** | மதிப்பீட்டு விலை விகிதத்திலே |
| | | | M/s.KAY YES Construction ஒப்பந்ததாரர்<br>வேலூர் | 0.37 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

ந.க.எண். 2376/2023 /இ1

<u>**அலுவலகக்குறிப்பு :–**</u>

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளில் வ.எண்.1 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. LD Man Power Solution** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம் .

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2 மற்றும் 3 ஏற்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.693**

14. நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 13, பழையாஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண். 25 ( வரி விதிப்பு எண். 057/82) கொண்ட கடைக்கு திரு.பி.ஆர்.குப்புசாமி என்பவருக்கு 01.04.2023 முதல் 31.03.2026 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. திரு.பி.ஆர்.குப்புசாமி என்பவர் இறந்துவிட்டார். திரு.பி.ஆர்.குப்புசாமி என்பவர் இறந்து விட்டதால், அவரது மகன் திரு.ஜி.கே.வெங்கடாசலம் என்பவர் தனது 17.11.2023ம் தேதிய மனுவில், தங்களால் கடையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால், கடையின் குத்தகை உரிமத்தினை 30.11.2023 ம் தேதி முதல் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்.

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 17.11.2023 ம் தேதிய குறிப்பில், பழையாஸ்பத்திரி வீதி ஆட்டிறைச்சி கடை எண். 25 ஐ 30.11.2023 ம் தேதி முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளலாம் எனவும், மேற்படி கடைக்கான குத்தகை உரிமத்தினை 30.11.2023 ம் தேதி முதல் ரத்து செய்து, மன்றத்தின் அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் தெரிவித்துள்ளார்,

எனவே வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படி மேற்படி பழையாஸ்பத்திரி வீதி கடை எண். 25 கொண்ட கடையின் குத்தகை உரிமத்தினை 30.11.2023 ம் தேதி முதல் ரத்து செய்து, பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 3060/2016/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.694**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண். 28 ல் அமைந்துள்ள ஆண்டு குத்தகை இனமான மொடச்சூர் வாரச்சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் குத்தகை உரிமம் இந்நகர்மன்றத்தீர்மான எண். 260 நாள் 31.01.2020ன் படியும், இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண.2400/2017/அ3 நாள் 13.02.2020ன் படியும் குத்தகைதாரர் திரு.ஜி.வி.மாதேஸ்வரன் என்பவருக்கு 14.02.2020 முதல் 13.02.2023 வரை மூன்றாண்டு காலத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. குத்கைதாரர் மேற்படி வாரச்சந்தை குத்தகை உரிமத்திற்கு ஏல முன்வைப்புத் தொகையாக ரூ.3,00,000/– மற்றும் குத்தகை தொகையாக ரூ.6,00,000/– வைப்புத் தொகை கணக்கில் செலுத்தியுள்ளார்.

கொரோனா நோய் தொற்று காலத்தில் அமல்படுத்தப்பட்ட பொது ஊரடங்கு காலத்தில் வாரச்சந்தை மூடப்பட்டிருந்த காரணத்தினால், வாரச்சந்தையின் குத்தகை உரிமத்தினை 01.06.2021ம் தேதி முதல் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்துவிட்டு, கொரோனா நோய் தொற்று காலத்தில் ஜுன் 2020 முதல் செப்டம்பர் 2020 வரையிலான காலத்திற்கு வாரசந்தை செயல்படாத காரணத்தினால், குத்தகை தள்ளுபடி செய்யக்கோரி மாண்புமிகு 2021 ஆம் ஆண்டில் மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழங்கு தொடர்ந்திருந்தார். (வழக்கு எண். W.P,No.12365/2021).

அரசாணை (D) எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA–IV) துறை, நாள்: 02.09.2020 ன் படி 2020 ஏப்ரல் மற்றும் மே ஆகிய இரண்டு மாதங்களுக்கான குத்தகை தள்ளுபடி செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டதின்படி மேற்படி நபருக்கு இரண்டு மாதங்களுக்கான குத்தகை தொகை ரூ.1,08,850/– மற்றும் பணியாளர் சம்பளம் ரூ. 45,650/– ஆக மொத்தம் ரூ.1,54,500/– தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி தள்ளுபடி செய்யப்பட்டது போக குத்தகைதாரர் குத்தகை உரிமத்தினை அனுபவித்த ஒரு வருடம் மற்றும் 108 நாட்களுக்கு (14.02.2020 முதல் 01.06.2021 வரை) செலுத்த வேண்டிய குத்தகை தொகை கீழ்க்கண்ட விபரப்படி கணினியில் கேட்பு உள்ளது

| வ.எண் | குத்தகை உரிம காலம் | | குத்தகை தொகை ரூ | பணியாளர் சம்பளம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 14.02.2020 முதல் 13.02.2021 | 2019–2020 & 2020–2021 | 6,53,100/– | 2,73,900/– | 9,27,000/– |
| 2 | 14.02.2021 முதல் 01.06.2021 | 2020–2021 & 2021–2022 | 94,508/– | 43,498/– | 1,38,006/– |
| **இரண்டு மாதங்களுக்கான தள்ளுபடி போக தற்போது கணிணியில் உள்ள கேட்பு தொகை** | | | **7,47,608/–** | **3,17,398/–** | **10,65,006/–** |

இந்நிலையில் அரசாணை (D) எண்.337 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA–IV) துறை, நாள்: 16.06.2023 ன் படி 2020 ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மற்றும் 2021 மே, ஜுன் ஆகிய ஐந்து மாதங்களுக்கும் ஊரடங்கு காலத்தில் மூடப்பட்டிருந்த குத்தகை இனங்களுக்கு குத்தகை தொகை தள்ளுபடி செய்யலாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து தற்போது குத்தகைதாரர் திரு.ஜி.வி.மாதேஸ்வரன் குத்தகை தள்ளுபடி செய்யக் கோரி தொடரப்பட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற வழக்கினை திரும்ப பெற்று விட்டார். சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். W.P,No.12365/2021 உத்தரவு நாள். 29.09.2023 (இணைய வழி பதிவிறக்கம் செய்யப்பட்ட நாள் 07.11.2023). மேற்கண்ட அரசாணையின் படி குத்தகைதாரருக்கு 14.02.2020 முதல் 13.02.2021 வரை உள்ள காலங்களில் மூன்று மாதங்களுக்கும், மற்றும் 14.02.2021 முதல் 01.06.2021 வரை உள்ள காலங்களில் ஒரு மாதத்திற்கும் குத்தகை தொகை மற்றும் பணியாளர் சம்பளம் தள்ளுபடி செய்யப்படவேண்டிய விபரம் பின்வருமாறு:

| வ.எண் | குத்தகை உரிம காலம் | | குத்தகை தொகை ரூ | பணியாளர் சம்பளம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 14.02.2020 முதல் 13.02.2021 | 2019–2020 & 2020–2021 (3 மாதங்கள்) | 1,63,275/– | 68,475/– | 2,31,750/– |
| 2 | 14.02.2021 முதல் 01.06.2021 | 2020–2021 & 2021–2022 (ஒரு மாதம்) | 57,146/– | 25,108/– | 82,254/– |
| **மொத்தம் நான்கு மாதங்களுக்கான தள்ளுபடி** | | | **2,20,421/–** | **93,583/–** | **3,14,004/–** |

மேற்கண்ட விபரங்களின் படி குத்தகைதாரர் குத்தகை உரிமத்தினை அனுபவித்த காலத்திற்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகை மற்றும் தள்ளுபடி செய்யப்படவேண்டிய குத்தகை தொகை விபரங்கள் பின்வருமாறு

| வ, எண் | குத்தகை உரிம காலம் | | குத்தகை தொகை ரூ | பணியாளர் சம்பளம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 14.02.2020 முதல் 13.02.2021 | 2019–2020 & 2020–2021 | 6,53,100/– | 2,73,900/– | 9,27,000/– |
| 2 | 14.02.2021 முதல் 01.06.2021 | 2021–2022 | 94,508/– | 43,498/– | 1,38,006/– |
| **3** | **மொத்தம் (வ.எண். 1 + 2)** | | **7,47,608/–** | **3,17,398/–** | **10,65,006/–** |
| 4 | அரசாணையின் படி 2020–2021 ம் ஆண்டில் மூன்று மாதத்திற்கான தள்ளுபடி | | 1,63,275/– | 68,475/– | 2,31,750/– |
| 5 | அரசாணையின் படி 2021–2022 ம் ஆண்டில் ஒரு மாதத்திற்கான தள்ளுபடி | | 57,146/– | 25,108/– | 82,254/– |
| **6** | **மொத்த தள்ளுபடி (வ.எண். 4 + 5)** | | **2,20,421/–** | **93,583/–** | **3,14,004/–** |
| **7** | **குத்தகைதாரர் செலுத்தப்பட வேண்டிய தொகை (வ.எண். 3 – 6)** | | **5,27,187/–** | **2,23,815/–** | **7,51,002/–** |

வருவாய் ஆய்வர் தனது 18.11.2023 ம் தேதிய குறிப்பில் குத்தகைதாரர் வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை அனுபவித்த ஒரு வருடம் 108 நாட்களுக்கான (14.02.2020 ம் தேதி முதல் 01.06.2021 ம் தேதி வரை) குத்தகை தொகை மற்றும் பணியாளர் சம்பளம் ரூ.10,65,006/– ல், மேற்கண்ட இரு அரசாணைகளின் படி ரூ.3,14,004/– ஐ தள்ளுபடி செய்யலாம் எனவும், குத்தகைதாரர் செலுத்தவேண்டிய குத்தகை தொகை ரூ.7,51,002/– ஐ அவரது வைப்புத் தொகை கணக்கிலிருந்து சரிக்கட்டிக்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படியும், மேற்கண்ட அரசாணை (D) எண்.337 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA–IV) துறை, நாள்: 16.06.2023 ன் படியும், குத்தகைதாரர் செலுத்தவேண்டிய மொத்த குத்தகை தொகை ரூ.10,65,006/– ல் ரூ.3,14,004/– ஐ தள்ளுபடி செய்தது போக ரூ.7,51,002/– ஐ அவரது வைப்புத்தொகை கணக்கிலிருந்து சரிக்கட்டிக்கொள்ளலாம் என்ற விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் தெரிவிக்க வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1290/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.695**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.3225/2018/அ3 நாள். 01.07.2022ன் படி , திருமதி.வி.மகாலட்சுமி என்பவருக்கு 05.07.2022 முதல் 04.07.2025 வரை மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 05.07.2022 முதல் 04.07.2023 வரையிலான முதலாம் ஆண்டிற்கான குத்தகை தொகை ரூ.5,00,900/– முழுவதும் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை உரிமத்திற்கு குத்தகை உரிமதாரர் வைப்புத் தொகை ரூ.4,50,000/– செலுத்தியுள்ளார்.

இந்நிலையில் பேருந்து நிலையத்தில் தூய்மை பாரத திட்டத்தின் கீழ், மேற்படி கட்டண கழிப்பிடத்திற்கு அருகிலேயே புதிய நவீன கட்டண கழிப்பிடம் (SMART TOILET) கட்டப்பட்டு, 05.07.2023 ம் தேதி முதல் திரு.எப்.ஜெமேசா என்பவருக்கு ஆண்டு குத்தகை தொகை ரூ.4,52,000/–க்கு மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

பேருந்து நிலையத்தில் உள்ள பழைய கட்டண கழிப்பிடத்தின் குத்தகை உரிமதாரர் திருமதி.வி.மகாலட்சுமி என்பவர், தான் குத்தகைக்கு எடுத்து நடத்தி வரும் கட்டண கழிப்பிடத்தின் மிக அருகிலேயே எந்தவிதமான முன் அறிவிப்புமின்றி, புதியதாக அதிநவீன கட்டண கழிப்பிடம் கட்டி குத்தகைக்கு விடப்பட்டு, 05.07.2023 முதல் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருவதால், தனது கழிப்பிடத்திற்கு வரும் வசூல் மிகவும் குறைந்து தனக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டு வருவதாகவும், தன்னால் குத்தகை தொகை செலுத்த இயலாத நிலையில் உள்ளதாகவும், எனவே தான் செலுத்த வேண்டிய குத்தகை தொகையில் இருந்து 40 சதவீதம் குறைத்து வழங்குமாறு தனது 18.08.2023 ம் தேதிய மனுவில் கோரியுள்ளார்.

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 20.09.2021 ம் தேதிய குறிப்பில், கழிப்பிடத்தினை நேரில் ஆய்வு செய்யப்பட்டதில், அருகருகே இரண்டு கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளதாலும், திருமதி.வி.மகாலட்சுமி என்பவருக்கு குத்தகை விடப்பட்டுள்ள கட்டண கழிப்பிடம் பழைய கட்டிடமாக உள்ளதாலும், பழைய கட்டண கழிப்பிடத்திற்கு வரும் நபர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்நகராட்சி சுகாதார அலுவலர் அவர்கள், பேருந்து நிலையத்தில் ஏற்கெனவே பயன்பாட்டில் இருந்து வந்த கட்டண கழிப்பிடத்திற்கு அருகில், தூய்மை பாரத திட்டத்தின் கீழ் புதியதாக நவீன கழிப்பிடம் கட்டப்பட்டு ஏலம் விடப்பட்டுள்ளது எனவும், புதிய நவீன கழிப்பிடம் பயன்பாட்டிற்கு வந்தபிறகு பழைய கட்டண கழிப்பிடத்திற்கு வரும் நபர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைய வாய்ப்புள்ளது எனவும், எனவே வருவாய் ஆய்வர் அறிக்கை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் தனது 27.09.2023 ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இந்நகராட்சி பொறியாளர் அவர்கள், பேருந்து நிலையத்தில் ஏற்கெனவே இருந்த பழைய கட்டண கழிப்பிடத்தின் அருகில் கட்டப்பட்டுள்ள புதிய தூய்மை பாரத திட்ட நவீன கட்டண கழிப்பிடம் பயன்பாட்டிற்கு வந்த பிறகு, பழைய கழிப்பிடத்திற்கு செல்கின்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக

குறைய வாய்ப்புகள் உள்ளது, வருவாய் ஆய்வர் அவர்களின் அறிக்கை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் தனது 14.11.2023 ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது 16.11.2023 ம் தேதிய குறிப்பில், மேற்படி பேருந்து நிலைய பழைய கட்டண கழிப்பிடத்தினை ஆய்வுசெய்யப்பட்டதில், அருகருகே இரண்டு கழிப்பிடங்கள் அமைந்துள்ளதாலும், ஏற்கெனவே இருந்த கட்டண கழிப்பிடம் பழைய கட்டிடமாக உள்ளதால், பழைய கட்டண கழிப்பிடத்திற்கு வரும் நபர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார். மேலும் பேருந்து நிலைய பழைய கட்டண கழிப்பிடத்திற்கு 2022–20223 ம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டு குத்தகை ரூ.5,00,900/– முழுவதும் செலுத்தப்பட்டுள்ளது எனவும், எனவே மன்றத்தின் அனுமதி பெற்று மீதமுள்ள இரண்டு ஆண்டுகளுக்கான குத்தகை தொகையில் 25 சதவீதம் குறைத்து வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்கண்ட விபரங்களின்படியும், வருவாய் ஆய்வர் அவர்கள் குறிப்பின் படியும், பேருந்து நிலையத்தில் உள்ள பழைய கட்டண கழிப்பிடத்திற்கான இரண்டமாண்டு 2023–2024 (05.07.2023 முதல் 04.07.2024) குத்தகை தொகை மற்றும் மூன்றாமாண்டு 2024–2025 (05.07.2024 முதல் 04.07.2025) குத்தகை தொகை ஆகியவற்றில் 25 சதவீதம் குறைத்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 3225/2018/அ3)

**அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**
**ஒத்திவைக்கப்பட்டதுமன்றத்தீர்மான எண்.696**

17. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணியினை செய்வதற்கு 31.10.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம்** | **கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் குடிநீர் லாரி பழுது ஏற்பட்டுள்ளதால் புதிய குடிநீர் லாரி கொள்முதல் செய்யும் வரை தற்காலிகமாக வாடகை அடிப்படையில் டேங்கர் லாரியில் குடிநீர் விநியோகம் செய்தல் | 1,50,000 | **M/s.ஸ்ரீ குமரன் வாட்டர்** | மதிப்பீட்டு விலை விகிதத்திலே |
| | | | அக்ஷயா & கோ | 7.08 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் . |

ந.க.எண். 2377/2023 /இ1

<u>**அலுவலகக்குறிப்பு :–**</u>

1. .மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிகளில் வ.எண்.2 -க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.ஸ்ரீ குமரன் வாட்டர்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம் .

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2 மற்றும் 3 ஏற்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.697**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட ஆண்டு குத்தகை இனங்களின் மூன்று ஆண்டுகளுக்கான குத்தகை உரிமம் வரும் 31.03.2024 ம் தேதியுடன் முடிவடைகிறது. அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள். 19.09.2008 ன் படி, ஆண்டு குத்தகை இனங்களை மூன்று ஆண்டு காலத்திற்கு

குத்தகைக்கு விடப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு 01.04.2024 முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படவேண்டியுள்ளது.

| வ.எண் | குத்தகை இனங்களின் விபரம் | குத்தகை காலம் |
|---|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குள் சாலையோர மரங்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான இடங்களில் உள்ள மரங்களின் மேற்பலன்களை அனுபவிக்கும் உரிமம் | 01.04.2024 முதல் 31.03.2027 |
| 2 | வாரச்சந்தையில் உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 01.04.2024 முதல் 31.03.2027 |

இந்நகராட்சி பொறியாளர் அவர்கள் தனது 14.11.2023 ம் தேதிய குறிப்பில், தற்போது மொடச்சூர் வாரச்சந்தை வளாகத்தில் வரிசை எண். 2 ல் கண்டுள்ள கட்டண கழிப்பிடம் அருகில், 15 வது மத்திய நிதிக்குழுவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3TPD கொள்ளளவு கொண்ட திடக்கழிவு மேலாண்மை பணிக்கு வளமீட்டு மையம் கட்டப்பட்டு வருகிறது எனவும், மேலும் வாரச்சந்தை வளாகத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் படி வாரச்சந்தை மேம்பாட்டு பணிகள் மற்றும் புதிய கழிப்பிடம் கட்டப்பட்டு வருகிறது எனவும், எனவே மேற்படி வளமீட்டு மையத்தில் பணிபுரியும் நகராட்சி பணியாளர்கள் பயன்படுத்த ஏதுவாக ஏற்கெனவே உள்ள பழைய கழிப்பிடத்தினை பொது ஏலம் விடாமல், புதியதாக கட்டப்பட்டு வரும் புதிய கழிப்பிடத்தினை சந்தை மற்றும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தலாம் என தெரிவித்துள்ளார்.

இந்நகராட்சி சுகாதார அலுவலர் அவர்கள், தனது 17.11.2023 ம் தேதிய குறிப்பில், வாரச்சந்தையில் செயல்பட்டு வரும் பொதுக்கழிப்பிடம் அருகில் நடைபெற்று வரும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு வளமீட்டு மையம் MRF கட்டப்பட்டு வருகிறது எனவும், மேற்படி பணிகள் முடிக்கப்பட்டவுடன் வளமீட்பு மையத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் வளமீட்பு மையத்திற்கு உலர்கழிவுகளை கொண்டு வரும் வாகனங்களுக்கான பணியாளர்களும் பயன்படுத்தும் வகையில் பழைய கழிப்பிடத்தினை உபயோகப்படுத்தலாம் என தெரிவித்துள்ளார்.

இந்நகராட்சி வருவாய் ஆய்வர் அவர்கள், தனது 20.11.2023 ம் தேதிய குறிப்பில், வாரச்சந்தையில் கட்டப்பட்டு வரும் வளமீட்பு மையத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்த உள்ளதால், வாரச்சந்தையில் ஏற்கெனவே உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறைக்கான குத்தகை உரிமத்தினை மன்றத்தின் அனுமதி பெற்று, 01.04.2024 ம் தேதி முதல் மூன்றாண்டு குத்தகை கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்கண்ட விபரங்களின் படியும் வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படியும், மேற்கண்ட பட்டியலில் வரிசை எண். 2 ல் கண்டுள்ள, வாரச்சந்தையில் உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறை ஆண்டு குத்தகை இனத்தினை மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கான கேட்பில் இருந்து 01.04.2024 முதல் நீக்கம் செய்யவும், வரிசை எண். 1 ல் கண்டுள்ள நகராட்சி எல்லைக்குள் சாலையோர மரங்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான இடங்களில் உள்ள மரங்களின் மேற்பலன்களை அனுபவிக்கும் குத்தகை உரிமத்திற்கு 01.04.2024 முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினம் மற்றும், 2024–2025, 2025–2026 மற்றும் 2026–2027 ஆகிய மூன்றாண்டுகளுக்கான ஆண்டு குத்தகை இனங்களின் ஏல அறிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் ஏற்படும் செலவினங்களையும் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2560/2023/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.698**

19. நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 28, IUDP வாரசந்தை கடை எண். 16 ( வரி விதிப்பு எண். 057/BD01/00065) கொண்ட கடையின் குத்தகை உரிமம் திரு.ஆர்.நாகராஜன் த/பெ. ரங்கசாமி என்பவருக்கு 01.01.2025 முதல் 31.12.2025 வரை மூன்றாண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நபர் தனது 11.10.2023ம் தேதிய மனுவில். மேற்படி கடையில் தனக்கு கோழி கசாப்பு கடை வைத்து நடத்த நகராட்சியால் அனுமதி வழங்கப்படாததால், கடையின் குத்தகை உரிமத்தினை ரத்து செய்து, தான் செலுத்திய வாடகை தொகை வைப்புத் தொகை ஆகியவற்றினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்.

வருவாய் ஆய்வர் அவர்கள் தனது. 17.11.2023 ம் தேதிய குறிப்பில், நகராட்சி ஏல நிபந்தனைகளின்படி வாடகை தொகை மற்றும் வைப்புத் தொகை ஆகியவற்றை திரும்ப வழிவகை இல்லை எனவும், மேற்படி கடையினை 31.10.2023 நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், மன்றத்தின் அனுமதி பெற்று குத்தகை உரிமத்தினை ரத்து செய்து மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும், மேலும் குத்தகைதாரருக்கு வாடகை தொகை மற்றும் வைப்புத் தொகை ஆகியவற்றை திரும்ப வழங்க வழிவகை இல்லை என்ற விபரத்தினை தெரிவித்து அறிவிப்பு வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்கள் குறிப்பின் படி, IUDP வாரசந்தை கடை எண். 16 (வரி விதிப்பு எண். 057/BD01/00065) கொண்ட கடையின் குத்தகை உரிமத்தினை 31.10.2023 ம் தேதி முதல் ரத்து செய்யவும், மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1567/2018/அ3)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.699**

20. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.16387/எம்/2023 நாள் 19.10.2023 ன் படி முத்தமிழ் டாக்டர் கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் 2023 ஜன் திங்கள் முதல் 2024 ஜுன் திங்கள் வரை நடை பெறுவதை முன்னிட்டு கோபிசெட்டிபாளையம் நகராட்சி மற்றும் K.M.C.H. மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையும் இணைந்து மாபெரும் இலவச மருத்துவ முகாம் 25.11.2023ல் நடத்தப்பட உள்ளது. அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.25000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2554/2023/எச்1 )

**அலுவலகக் குறிப்பு :**
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்காண் செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1,2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.700**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2022-23 திட்டத்தில் கசடு கழிவுகள் அகற்றுதல் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு தொட்டி (STP cum FSTP) கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியை செயல்படுத்த (CTE) தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அனுமதி பெற வேண்டியுள்ளதால் அதற்கு பதிவு கட்டணமாக ரூ.2,09,160 /- தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு பொது நிதியில் இருந்து செலுத்துவதற்கு மேலும் இப்பணியை கலந்துஆலோசகர் (Consultant) மூலம் கணிணியில் பதிவேற்றம் செய்து உரிய அனுமதி பெற்று தர கலந்துஆலோசகர் கட்டணம் ரூ25,000/- செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.999/2023/இ1)

**அலவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம் .
2. மேற்காண் செலவின தொகையை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம் ,

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.701**

22. இந்நகராட்சியின் மூலம் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர். திரு. மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின் ஒரு பணியாக 25.11.2023 ஆம் தேதியன்று மருத்துவ முகாம் நடைபெறவுள்ளதால் அம்மருத்துவ முகாம் குறித்து பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வகையில் விழிப்புணர்வு Flex போர்டுகள் தயார் செய்யும் பணிக்கும், துண்டு பிரசுரங்கள் அச்சடித்து விநியோகம் செய்யும் பணிக்கும் உள்ளூர் நிறுவனங்களில் 23.11.2023 ஆம் தேதி கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

**1. விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகள்**

| விபரம் | Storke Digital 5, முத்துஷா வீதி, கோபிசெட்டி பாளையம் | மாதேஸ் டிஜிட்டல் 309, மில் ரோடு, மொடச்சூர், கோபிசெட்டி பாளையம் | பரணி ஆர்ட்ஸ் & டிசைன்ஸ் யாகூப் வீதி, கோபிசெட்டி பாளையம் |
|---|---|---|---|
| 10'X10' சைசில் பிளக்ஸ் தயார் செய்து பிரேமில் பேஸ்ட்டிங் செய்து விநியோகம் செய்யும் பணிக்கு | ரூ. 1600/- | ரூ. 1650/- | ரூ. 1720/- |
| 20'X10' சைசில் பிளக்ஸ் தயார் செய்து பிரேமில் பேஸ்ட்டிங் செய்து விநியோகம் செய்யும் பணிக்கு | ரூ. 2450/- | ரூ. 2475/- | ரூ. 2500/- |
| 7'X4' சைசில் வாகனத்தில் பொருத்திடும் பிளக்ஸ் பேனர் | ரூ. 450/- | ரூ. 475/- | ரூ. 500/- |
| மொத்தம் | ரூ. 4500/- | ரூ. 4600/- | ரூ. 4720/- |

**2. விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள்**

| விபரம் | J.K.P ஆப்செட் பிரிண்டிங் முத்துஷா வீதி, கோபிசெட்டி பாளையம் | ஸ்ரீ சாரதி ஆப்செட் பிரிண்டர்ஸ் 194, மில் ரோடு, மொடச்சூர், கோபிசெட்டி பாளையம் | செந்தாமரை அச்சகம் 62,சத்தி மெயின் ரோடு, கோபிசெட்டி பாளையம் |
|---|---|---|---|
| A 4 – சைசில் 1000 துண்டு பிரசுரங்கள் அச்சடித்து வழங்க | ரூ. 950/- | ரூ. 975/- | ரூ.1000/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் முதற்பணிக்கு M/s. Storke Digital, 5, முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் என்பவரின் விலை விகிதமும் – இரண்டாவது பணிக்கு M/s. J.K.P ஆப்செட் பிரிண்டிங் முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் என்பவரின் விலை விகிதமும் குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம்.

இம்முகாமிற்கான மருத்துவர்கள், பாராமெடிக்கல் பணியாளர்கள் மற்றும் இதர மருத்துவ பணியாளர்கள் போன்றவர்களுக்கு தேவையான காலை சிற்றுண்டி, டீ காபி பிஸ்கட், மதிய உணவு போன்றவற்றை உள்ளூர் கடைகளில் உள்ளூர் விலைவிகிதத்தில் வாங்கிக் கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1464/2023/எச்1)

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.702**

23. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள கழிவுகளை அகற்றும் வாகனங்கள் கொசு ஒழிப்பு பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் புகை தெளிப்பான் இயந்திரங்கள் மற்றும் கொசு ஒழிப்பு மருந்துடன் கலந்து தெளிக்க தேவைப்படும் எரிபொருட்களுக்கான டீசல், பெட்ரோல், ஆயில் மற்றும் கிரீஸ் போன்றவற்றின் பயன்பாடுகளுக்கு நவம்பர் 2023 மாதம் முதல் மார்ச் 2024 வரையிலான காலங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 971/2020/எச் 1)

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நவம்பர் 2023 ஆம் மாதத்திற்கான தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
3. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது, 2 ஏற்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.703**

24. இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனங்களான TN 36 J 5977, TN 36 J 6885, TN 36 J 2724 மற்றும் TN 36 AA 4492 ஆகிய வாகனங்கள் 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால் அரசு உத்திரவின் படி நிறுத்தி வைக்க இவ்வலுவலக செய்லமுறைகள் ந.க.எண். 1511/2023/இ1 நாள். 17.07.2023 – ன் படி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது தமிழக அரசின் போக்குவரத்து துறை ஆணையரின் உத்திரவு G.O(MS) No. 569/06.11.2023 நாள். 30.09.2024 – ன் படி மேற்கண்ட வாகனங்களை தொடர்ந்து இயக்கி கொள்ள உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட வாகனங்கள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளதால் அந்த நான்கு வாகனங்களையும் இயக்கி கொள்ளவும் அதில் மூன்று வாகனங்களான TN 36 J 6885, TN 36 J 2724 மற்றும் TN 36 AA 4492 ஆகிய வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று புதுப்பித்துக்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 3.00/– இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், அவ்வாகனங்களுக்கு வாகன காப்பீட்டுத்தொகை காப்பீடு வழங்கும் நிறுவனம் நிர்ணயிக்கும் தொகையினை செலுத்திக் கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2648/2023/எச் 1)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.704**

25. இந்நகராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் எலக்ட்ரானிக்கழிவுகளை (E –Waste) TNPCB – யால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான Green India Recyclers, Coimbatore அவர்களிடம் ரூ.150/– + GST 18% Per Kg என்னும் விலைவிகிதத்தில் , அவ்வப்போது ஒப்படைக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 30,000 /– ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2681 /2023/எச்1 )

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.705**

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு– D, பிளாக் – 20, நில அளவை எண்கள். 9/1, 9/3, 10/1, 10/3, 24/1, 24/3, 25/1, 25/3, (பழைய க.ச.எண்.244/ABpt, 245/1Pt) இல் 1.95 ஏக்கர் மனையிடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட கோபிசெட்டிபாளையம் முழுமை

திட்டத்தில் மனுதாரர் மனையிடத்தின் தற்போதைய உபயோகத்தினை உறுதி செய்தும் பொதுமக்களின் ஆட்சேபனை மற்றும் ஆலோசனை கோருதல் தொடர்பாக அறிவிப்பினை ஏதேனும் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களில் 8 X 8 செ.மி என்ற அளவில் விளம்பரம் செய்து அதன் பின்னர் கோபிசெட்டிபாளையம் உள்ளூர் திட்ட குழுமம் தீர்மானத்துடன் அனுப்பி வைக்குமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் இணையதள எண்.G6KMAVEL/2023 நாள்.29.05.2023 இல் தெரிவிக்கப்பட்டது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் மேற்படி இணையதள கடிதம் வருவதற்கு முன்பாக திரு.எம்.எம்.பழனிவேல் என்பவர் 31.03.2023 ஆம் நாளிட்ட தனது கடிதத்தில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு– D, பிளாக் – 20, TS No. 9/1, 10/1 ,24/1, 25/1, இதில் 1.64 ஏக்கர் காலியிடத்தில் விவசாயி பூமியை வீட்டு மனைகளாக மாற்ற நடவடிக்கை எடுத்துவருவதாக தெரியவருகிறது என்றும், மேற்படி சொத்து குறித்து திரு.பி.குமார் மீது கூடுதல் மாவட்ட நீதி மன்றம் கோபியில் அசல் வழக்கு எண். 131/2023 இன் படி திரு.எம்.எம். பழனிவேல் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருவதால் வழக்கு முடியும் வரை மேற்படி சொத்து சம்மந்தமாக திரு.குமார். த/பெ. பழனியப்பன் மனையிடமாக மாற்ற விண்ணப்பம் கொடுத்தால் பரிசீலினை செய்ய வேண்டாம் என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இது நீதிமன்ற வழக்கில் உள்ளதால் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.736/2023/எப்1 நாள்.05.04.2023 இல் தெரிவிக்கப்பட்டது.

திரு.எம்.எம்.பழனிவேல் என்பவரின் ஆட்சேபனை விண்ணப்பத்திற்கு பின்பாக திரு.பி,குமார் அவர்களின் மேற்காணும் விபரப்படியான 1.95 ஏக்கர் நிலத்தினை விவசாய உபயோகத்திலிருந்து கலப்பு குடியிருப்பு பகுதியாக நில உபயோக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், அவர்களிடமிருந்து நகர்மன்றத்தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டதையடுத்து மேற்படி சொத்து குறித்து அசல் வழக்கு எண். 131/2023 நிலுவையில் இருப்பதால் நகர் ஊரைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தின் மீது மேல்நடவடிக்கை தொடர இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1305/2023/எப்1 நாள்.20.06.2023 இல் நகராட்சி வழக்கறிஞரின் சட்ட கருத்துரு கோரப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்படி அசல் வழக்கு எண்.131/2023 வழக்கின் நிலையை அறிந்து கொள்ள ஆன்லைன் மூலமாக பரிசீலித்த போது, மேற்படி வழக்கில் நகராட்சி தரப்பினர் அல்ல என்பதும், மேற்படி வழக்கில் இடைகால உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்பதும் அறிய முடிகிறது. மேற்படி ஆவணங்கள் அடிப்படையில் திரு.பி.குமார் என்பவர் பூரண உரிமையாளர் என்பதும், மனு சொத்து அவரது சுவாதீனத்தில் இருந்து வருவதையும் அறிய முடிகிறது. எனவே, மேற்படி சொத்தை விவசாய உபயோகத்திலிருந்து கலப்பு குடியிருப்பு பகுதியாக நில பயன் மாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதில் எவ்வித சட்ட தடையும் இல்லை என 26.06.2023 ஆம் நாளிட்ட கடிதத்தில் நகராட்சி வழக்கறிஞரால் சட்டக்கருத்துரு வழங்கப்பட்டது.

மேற்படி சட்ட கருத்துருவின் அடிப்படையில் மேற்படி சொத்தை நில பயன்பாடு மாற்றம் செய்ய பொதுமக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை இருப்பின் 30 நாட்களுக்குள் தெரிவிக்க கோரி தினசரி ( தமிழ் மற்றும் ஆங்கிலம்) நாளிதழ்களில் விளம்பரம் செய்து தரக்கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1305/2023/எப்1 நாள்.20.07.2023 இல் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஈரோடு அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் 29.07.2023 இல் தினசூரியன் தமிழ் மற்றும் AFTER NOON ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து 7 நபர்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனை விண்ணப்பங்களில் மேற்படி இடத்தில் ஏற்கனவே கிணறு இருந்ததாகவும் தற்போது அது மூடப்பட்டுள்ளதாகவும் மேலும் மேற்படி இடத்திற்கு அருகில் சுடுகாடு அமைந்துள்ளது என்றும் இவைகளை மறைத்து மனைகளாக பிரித்து விற்கும் பட்சத்தில் அதனை நம்பி இடம் வாங்கும் பொதுமக்கள் பாதிக்கப்படுவதுடன் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படும் எனவும், மேற்படி இடத்தில் இருந்த கொப்பு வாய்க்கால் மூடப்பட்டு அதனால் விவசாயம் செய்து வந்த

விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த இடத்திற்கு அருகில் சுடுகாடு உள்ளது என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கடிதம் ஓ.மு.எண்.1290121/2023/கே2 நாள்.08.09.2023 இல் வரப்பெற்ற ஆட்சேபனை விண்ணப்பங்களும் ஏற்கனவே இந்நகராட்சிக்கு அனுப்பப்பட்ட ஆட்சேபனை விண்ணப்பங்களும் ஒன்றே ஆகும்.

மேற்காணும் ஆட்சேபனைகளை தொடந்து நகர சார் ஆய்வாளர் 20.09.2023 ஆம் நாளிட்ட குறிப்பில் ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டதில். மேற்படி இடமானது கோபிசெட்டிபாளையம் நெ.1 இணை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.4364/2022 இன் படி பழனியப்பன் மகன் திரு.பி.குமார் என்பவருக்கு தனித்து பாத்தியப்பட்டு அதன் மொத்த பரப்பான 1.95 ஏக்கர் பூமியினை தனி அத்து அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றும், மேற்படி பூமியானது பல ஆண்டுகளாக விவசாய பயன்பாடு அற்று தரிசு நிலமாகவே இருப்பது ஆவணங்கள் அடிப்படையிலும் மற்றும் விசாரணையின் அடிப்படையிலும் அறிய முடிகிறது என்றும் மேற்படி பூமியில் நீர்நிலைகள் ஏதும் இல்லை என்பதும் , நீர் வழி பாதைகளோ (கொப்பு , மற்றும் வாய்க்கால் போன்றவை) நீர் பிடிப்பு பகுதிகளோ ஏதும் இல்லை என்றும் இப்பூமியில் குறுக்கு நெடுக்காக உயர் மின் அழுத்த கம்பிகள் ஏதும் செல்வதில்லை என்றும் மேற்படி பூமியில் இருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் சுடுகாடு, மின்மாயனம் போன்ற இனங்கள் ஏதும் இல்லை என்றும் இதில் குறைபாடுகள் ஏதும் இல்லை என்றும் கள ஆய்வில் தெரியவருவதாக நகர சார் ஆய்வரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் நகரசார் ஆய்வர் குறிப்பின் படி ஆட்சேபனை கடிதங்களில் குறிப்பிட்டுள்ள அனைத்தும் உண்மைக்கு புறம்பாகும் என்றும் இதனையும் மீறி ஆட்சேபனைகளுக்கான ஆவணங்கள் ஏதும் இருப்பின் அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் உரிய ஆவணங்களுடன் இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு ஆட்சேபனை தாரர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1305/2023/எப்1 நாள். 12.10.2023 இல் அறிவிப்பு அனுப்பப்பட்டது. இதனையடுத்து 20.10.2023 அன்று ஆட்சேபனை செய்யப்பட்ட 7 நபர்களில் 6 நபர்கள் மேற்படி நிலப்பயன்பாடு மாற்றம் செய்ய எவ்வித ஆட்சேபனையும் இல்லை என எழுத்து வடிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கீழ்பவானி முறை நீர்பாசன விவசாயிகள் சபை செயலாளர் திரு.பா.மா.வெங்கடாச்சலபதி அவர்களிடமிருந்து ஆட்சேபனை தொடர்பான கடிதம் வரப்பெறவில்லை. இருப்பினும் ஆட்சேபனைதாரர்களுக்கு மீள ஒரு வாய்ப்பாக உரிய ஆவணங்களுடன் 15.11.2023க்குள் நேரில் ஆஜராகுமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1305/2023/எப்1 நாள்.03.11.2023 இல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மேற்காணும் ஆட்சேபனைதாரர்களில் 6 ஆட்சேபனைதாரர்கள் நேரில் ஆஜராகவில்லை. ஆனால் திரு.பா.மா.வெங்கடாச்சலபதி என்பவர் 14.11.2023 ஆம் நாளிட்ட கடிதத்தில் 15.11.2023 ஆம் தேதியிலிருந்து ஒரு வார காலத்திற்குள் நேரில் வந்து ஆவணங்கள், விளக்கங்கள், விவசாயிகள் குழுவாக வந்து சந்திக்க நேரம் ஒதுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் அன்னார் 22.11.2023 வரை நேரில் ஆஜராகவில்லை. இதனை தொடர்ந்து 10.11.2023 ஆம் நாளிட்ட விண்ணப்பத்தில் திரு.கே.சக்திவேல் முருகன் என்பவர் மேற்படி இடத்தின் உரிமையாளர் ஆயக்கட்டு பாசன நிலத்தை மறைத்து ஆயக்கட்டு பாசன நிலத்தை வீட்டு மனை இடமாக மாற்றி அங்கீகாரம் பெற முயற்சி செய்து வருவதாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் 22.11.2023 ஆம் நாளிட்ட திரு.ப.குமார் விண்ணப்பத்தில் அன்னாருக்கு சொந்தமான மேற்படி இடத்தில் கோபிசெட்டிபாளையம் வட்டாட்சியர் அவர்கள் சான்று ஓ.மு.எண்.9351/2023/அ1 நாள்.18.11.2023 இல் திரு.ப.குமார் என்பவருக்கு சொந்தமான 1.95 ஏக்கர் இடமானது தனித்து பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து பூமிகளின் வழியே கைக்கொப்பு, வாய்க்கால், நீர்வழிப்பாதை மற்றும் பொதுப்பணித்துறை வாய்க்கால் ஏதும் செல்லவில்லை என சான்று வழங்கப்பட்டுள்ளது. எனவே, ஆட்சேபனைதாரர்களால் செய்யப்பட்ட அனைத்து ஆட்சேபனைகளும் உண்மைக்கு புறம்பானது என்பது தெரிகிறது.

மேலும், சென்னை உயர்நீதி மன்ற உத்தரவு W.P.NO.24321/2023 நாள். 18.08.2023. இல் மேற்படி வழக்கில் 5 வது பிரதிவாதியான நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்களுக்கு மேல்நடவடிக்கை தொடர 8 வார கால அவகாசம் வழங்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.மேலும், OS.No.131/2023 (Pricipal District and Sessions Judge) முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் ஈரோடு வழக்கு நிலுவையில் உள்ளதாலும், மேற்படி வழக்கில் பெறப்படும் தீர்ப்பில் குறிப்பிடப்படும் சாதக, பாதகத்திற்கு மனுதாரர் கட்டுப்பட்டவர் ஆவார்.மேற்படி விபரங்களின் அடிப்படையில் திரு.ப.குமார் அவர்களின் இணையதள விண்ணப்ப எண்.G6KMAVEL நாள்.06.02.2023 இல் கோரிய விவசாய உபயோகத்திலிருந்து கலப்பு குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன் மாற்றம் தொடர்பாக நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு மேற்காணும் ஆவணங்களுடன் அனுப்ப மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.1305/2023/எப்1)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.706**

27. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலை பகுதிகளில் 99 தெருக்களில் 780 கம்பங்கள் நட்டு வான்வழி நூழிலை கம்பிவடங்கள் 27.091 கிலோ மீட்டர் தொலைவில் ஜியோ டிஜிட்டல் பைபர் நிறுவனம் வான்வழி நூழிலை கம்பிவடங்கள் (Overhead OFC) உட்கட்டமைப்பை நிறுவுவதற்காக அனுமதி கோரியுள்ளதாகவும் தகவல் தொழில் நுட்ப துறை அரசாணை G.O.(Ms) No. 4 information Technology (E1) துறை நாள். 25.01.2022 இல் தெரிவித்துள்ளவாறு வழிமுறைகளை பின்பற்றி வான்வழி கம்பங்கள் நிறுவுவது தொடர்பான விரிவான முன் மொழிவினை 15 தினங்களுக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் ஏனெனில் மனுதாரருக்கு 60 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே உரிய முன்மொழிவுகளை உடன் அனுப்பி வைக்குமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.21098/2023/கே3 நாள்.17.10.2023 இல் கோரப்பட்டுள்ளது.

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 99 தெருக்களில் 780 கம்பங்கள் நட்டு வான்வழி நூழிலை கம்பிவடங்கள் அமைக்க அரசாணை (MS) எண்.04 Information Technology (E1) துறை நாள்.25.01.2022 இல் கிலோ மீட்டர் ஒன்றுக்கு ரூபாய் 1000 வீதம் 28 கிலோ மீட்டருக்கு ரூபாய் 28000/– (ஒருமுறை மட்டும்) SBI Bank DD No.781232 மற்றும் 781233 நாள்.08.10.2023 இல் இந்நகராட்சிக்கு மேற்படி நிறுவனத்தாரால் செலுத்தப்பட்டுள்ளது. வான்வழி நூழிலை கம்பிவடங்கள் பராமரிப்புக்காக கம்பம் ஒன்றுக்கு ரூபாய்.700/– வீதம் ( 28 கிலோ மீட்டர் = 30 மீட்டருக்கு ஒரு கம்பம் என்றால் 28000/30 = 933.33 என்பதை முழு எண்ணிக்கையாக கணக்கிட்டால் 1000 கம்பங்கள் ஆகும்.) இதன் அடிப்படையில் 700 x 1000 கம்பங்களுக்கு ரூபாய்.7,00,000/– (ஒருமுறை மட்டும்) இந்நகராட்சிக்கு மேற்படி நிறுவனத்தாரால் செலுத்தப்பட வேண்டும்.

மேற்படி மனு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கடிதத்தில் 60 நாட்களுக்குள் அனுமதி வழங்குவது அரசாணை (MS) எண்.04 Information Technology (E1) துறை நாள்.25.01.2022 இல் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் விரைவில் இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் இதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முன்மொழிவினை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. Aerial Pole ஒன்றுக்கு ரூ.700/– வீதம் 1000 எண்கள் ரூ.7,00,000/– மேற்படி நிறுவனத்தாரால் செலுத்திய பின்னர் முன்மொழிவுகள் அனுப்பலாம்.
2. மேற்படி பணிகள் மேற்கொள்ளப்படும்போது பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் எவ்வித இடையூறுமின்றி பணிகள் மேற்கொள்ளபட வேண்டும்.
3. 99, தெருக்களிலும், 28 கி.மீ தூரத்திற்கு 1000 எண்ணிக்கையில் அமைக்க இருக்கும் வான்வழி கம்பங்கள் (AERIAL POLES) வாயிலாக வான்வழி நூழிலை கம்பிவடங்கள் மட்டுமே அமைக்க வேண்டும்.

4. மேற்குறித்த நிபந்தனைகளுக்கு மாறாகவோ, பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் பணிகள் செய்யும் போது எவ்வித இடையூறும் இன்றி பணிகள் மேற்கொள்ளவில்லை என்றாலும்,ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு இந்நகராட்சியிலிருந்து புகார் அனுப்ப நேரிடும். மேலும், சட்ட சிக்கல் மற்றும் இதில் ஏதேனும் இழப்பீடுகள் மற்றும் ஏதாவது பிரச்சனைகள் ஏற்படின் இந்நகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

(ந.க.எண்.1805/2022/எப்1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.707**

(ஒப்பம்)– என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி